# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி

## திண்டுக்கல் - 624 001

தேசிய தரமதிப்பீட்டு ஆய்வுக் குழுவால் ‘A’ தரச்சான்றளிக்கப்பட்ட கல்லூரி

**கல்லூரி ஆண்டு மலர்**






# மன்றக் கூட்டங்கள்

| துறை | நாள் | சிறப்பு விருந்தினர் | தலைப்பு |
|---|---|---|---|
| தமிழ் | 1.2.18 | முனைவர் சோ.கி.கல்யாணி<br>ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கலைக்கல்லூரி, மதுரை. | 1. தமிழ் கற்பதன் அவசியம் மற்றும் தமிழ் மொழியின் சிறப்புகள்<br>2. இலக்கியங்களில் வாழ்வியல்நெறி |
| ஆங்கிலம் | 22.1.18 | திரு.D.ஜெயச்சந்திரன்<br>முன்னாள் துறைத்தலைவர் ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி. | Richness of the English language |
| | 22.2.18 | முனைவர்.S.சாயராபானு<br>இணைப்பேராசிரியர் பாத்திமா கல்லூரி, மதுரை | Recent trends in post colonial literature |
| வரலாறு | 23.2.18 | முனைவர்.K.சங்கரி M.A.,M.Phil,Ph.D.,<br>இணைப்பேராசிரியர், வரலாற்றுத்துறை, அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம். | 1. பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள்<br>2. சுற்றுச்சூழலில் ஏற்படும்பிரச்சினைகள் மற்றும் மனித உரிமை மீறல் |
| பொருளியல் | 6.2.18 | முனைவர்.S.விஜயலெட்சுமி<br>உதவிப்பேராசிரியர், பொருளியல்துறை, அரசு கலைக்கல்லூரி, கோயமுத்தூர் | இந்தியாவில் பணக் கொள்கை |
| | | முனைவர்.S.சித்ரா<br>உதவிப்பேராசிரியர், பொருளியல்துறை, அரசு கலைக்கல்லூரி, கோயமுத்தூர் | சரக்கு மற்றும் சேவை வரி |
| கணிதம் | 20.3.18 | முனைவர்.D.உதயக்குமார்<br>முன்னாள் கணிதத் துறைப் பேராசிரியர் R.V.S.பொறியியல் கல்லூரி, திண்டுக்கல். | 1. Mathematical logic<br>2. Pure Mathematics is no more pure |
| வேதியியல் | 5.1.18 | திருமதி.S.தேவிமீனாட்சி M.Sc.,M.Phil.,<br>துறைத் தலைவர், வேதியியல் துறை, நாடார் சரஸ்வதி கல்லூரி, தேனி. | 1. Dye resist tecniques for fabric designing<br>2. Dye removal techniques |
| புவியியல் | 13.2.18 | முனைவர்.K.ஜமுனா M.Sc.,M.Phil.,Ph.D.,<br>முதல்வர், அரசு கலைக்கல்லூரி, உத்திரமேரூர். | 1. The recent trends of remote sensing in geography<br>2. Applications of GIS in geomorpology |
| விலங்கியல் | 27.2.18 | திரு.D.வெங்கடேஷ் I.F.S.<br>வன அலுவலர், திண்டுக்கல். | வனம் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு |
| இயற்பியல் | 2.1.18 | முனைவர்.மு.சித்தார்த்தமுத்து விஜயன்<br>Senior, Scientist, CSIR, பெங்களூரு. | The recent trends in data Intensive scientific research |
| கணினி அறிவியல் | 6.12.17 | முனைவர்.அ.ரம்யா<br>உதவி ஆராய்ச்சியாளர்<br>மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி. | 1. Mobile App real time scenario<br>2. Mobile App development |
| தாவரஉயிர்த் தொழில் நுட்பவியல் | 23.1.18 | முனைவர்.G.கிரேஸ் லிடியால் புஷ்பலதா<br>இணைப் பேராசிரியர், தாவரவியல்த் துறை, ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கலைக்கல்லூரி, மதுரை. | Botany for Life and Learning |
| வணிகவியல் | 12.2.18 | முனைவர்.து.சம்பத் M.Com.,M.Phil.Ph.D.,<br>பொறுப்பு முதல்வர், யாதவா கல்லூரி, மதுரை. | சரக்கு மற்றும் சேவை வரி |

# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி

**திண்டுக்கல் - 624 001**

தேசிய தரமதிப்பீட்டு ஆய்வுக் குழுவால் 'A' தரச்சான்றளிக்கப்பட்ட கல்லூரி

ஏப்ரல் 2019

## கல்லூரி ஆண்டு மலர்

இதழ் - 53

2018 - 2019

## மன்றக் கூட்டங்கள்

| துறை | நாள் | சிறப்பு விருந்தினர் | தலைப்பு |
|---|---|---|---|
| தமிழ் | 8.2.19 | முனைவர் மு.மதியழகன்<br>உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,<br>அரசுகலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை. | 1. இன்று தமிழ்க்கல்வியின் அவசியம்<br>2. தமிழ் மொழியும், பணி வாய்ப்பும் |
| ஆங்கிலம் | 8.2.19 | முனைவர்.வி.கிறிஸ்டோபர் ரமேஷ்<br>உதவிப்பேராசிரியர், ஆங்கிலத்துறை,<br>அரசு கலைக்கல்லூரி, மேலூர். | Contemporary literary Theories |
| | 18.2.19 | முனைவர்.கே.சிந்தாமணி (ஓய்வு)<br>பேராசிரியர், ஆங்கிலத்துறை,<br>அரசு கலைக்கல்லூரி, உடுமலைபேட்டை | Pleasures of learning poetry |
| வரலாறு | 22.2.19 | முனைவர்.M.S.பாத்திமாபேகம்<br>உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை,<br>ஜி.டி.என்.கலைக்கல்லூரி, திண்டுக்கல். | 1. Women Empowerment<br>2. Career Opportunities with a History degree |
| பொருளியல் | 20.2.19 | முனைவர்.P.ரவிச்சந்திரன்,<br>இணைப்பேராசிரியர், மற்றும் தலைவர்,<br>பொருளியல் துறை,<br>ஜி.டி.என் கலைக்கல்லூரி, திண்டுக்கல். | 1. Recent Trends in Service sector<br>2. Energy Crisis |
| கணிதம் | 28.2.19 | முனைவர்.D.உதயக்குமார்<br>பேராசிரியர், கணிதத்துறை.<br>R.V.S.பொறியியல் கல்லூரி, திண்டுக்கல். | 1. Applications of graph Theory<br>2. Recent Trends in operation Research |
| வேதியியல் | 9.1.19 | திருமதி.S.மீனா M.Sc.,M.Phil.,M.Ed.,<br>உதவிப்பேராசிரியர், வேதியியல் துறை,<br>சக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒட்டன்சத்திரம் | 1. Nanotechnology<br>2. Term symbols and Coordination Chemistry |
| புவியியல் | 7.2.19 | முனைவர்.V.குமார்<br>Director of School Education, Madurai. | 1. போட்டித் தேர்வுகளும், புவியியலும்<br>2. புவியியலுக்கான வேலைவாய்ப்புகள் |
| விலங்கியல் | 23.2.19 | திரு.M.ராஜேஷ் M.Sc.,M.Phil.,<br>பேராசிரியர், விலங்கியல் துறை,<br>தி அமெரிக்கன் கல்லூரி, மதுரை. | 1. Role of Women in Environmental Protection<br>2. Research and fellowship opportunities |
| இயற்பியல் | 12.2.19 | முனைவர்.A.ஜாக்குலின்ரெஜினாமேரி<br>இணைப்பேராசிரியர், மற்றும் தலைவர்,<br>இயற்பியல் துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி, பெரியகுளம். | 1. இன்றைய வாழ்வில் இயற்பியலின் பயன்பாடுகள்<br>2. போட்டானிக்ஸ் மற்றும் அதன் பயன்பாடுகள் |
| கணினி அறிவியல் | 27.9.18 | திரு.செந்தில்குமார்<br>Chief operating offices, Airmate Technologys Chennai. | Web Development |
| தாவரஉயிர்த் தொழில் நுட்பவியல் | 19.2.19 | முனைவர்.A.V.P.கார்த்திகேயன்<br>இணைப் பேராசிரியர், தாவரவியல் துறை,<br>அரசு கல்லூரி, கரூர். | Recent Trends in Transgenic Plants |
| வணிகவியல் | 20.2.19 | முனைவர்.N.சுந்தரம்,<br>பேராசிரியர் | How to Identify Research Topic<br>School of Social Studies, VIT University, Vellore. |

# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி

திண்டுக்கல் - 624 001. தமிழ்நாடு.

தேசிய தரமதிப்பீட்டு ஆய்வுக் குழுவால் 'A' தரச்சான்றளிக்கப்பட்ட கல்லூரி

M.V.முத்தையா
அரசினர் மகளிர் கலைக் கல்லூரி
திண்டுக்கல்.

NAAC




## கல்லூரி ஆண்டு மலர்


இதழ் - 54 2019 - 2020

## வணிகவியல் துறை

27.11.2019 அன்று Mr.Mathan Kumar Gopal, Professor, A.R.School of Business, Dindigul அவர்கள் "POWER LECTURE ON ONLINE ADVERTISING" என்ற தலைப்பில் வணிகவியல் துறை மாணவிகளுக்கு சிறப்புரை நிகழ்த்தினார். இக்கருத்தரங்கில் முதல் மற்றும் இரண்டாம் மற்றும் மூன்றாமாண்டு மாணவிகள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

02.12.2019 அன்று "E-Commerce" என்ற தலைப்பில் Mr.T.Dinakaran மற்றும் Mr.R.Shanmuganathan, Professor, Vijay Institute of Mangement, Dindigul அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள். இதில் முதல் மற்றும் இரண்டாம் சுழற்சி மூன்றாமாண்டு மாணவியர்கள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

13.12.2019 அன்று - "A Key to Auditing" என்ற தலைப்பில் Mr.D.Kumaresan, Professor, AR School of Business, Dindigul அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள். இக்கருத்தரங்கில் முதல் மற்றும் இரண்டாம் சுழற்றி



இரண்டாம் ஆண்டு மாணவியர்கள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

திண்டுக்கல் எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் முதுநிலை வணிகவியல் துறையின் சார்பாக 2019-20 கல்வியாண்டிற்கான

# தமிழ்த்துறை




23.01.2020 அன்று தமிழ்த்துறை இலக்கிய மன்றத்தின் துவக்க விழா நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க.நாகநந்தினி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினர் முனைவர் ச.திருஞானசம்பந்தன். தேர்வு நிலை விரிவுரையாளர் (ப.நி) தமிழ்த்துறை, அரசர் கல்லூரி, திருவையாறு அவர்கள் சிறப்புரை ஆற்றினார். விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் செ.லதாபூரணம் அவர்கள் தலைமையுரையாற்றினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் வி.ச.ஈஸ்வரி அவர்கள் நன்றியுரையாற்றினர்.

# ஆங்கிலத் துறை



இக்கல்வியாண்டின் முதுகலை மாணவியருக்கான ஆங்கில இலக்கிய மன்றக் கூட்டம் 12.03.2020 அன்று முற்பகல் நம் கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி.செ.லதா பூரணம் அவர்கள் தலைமையில் Introduction to Literary Theories என்ற தலைப்பில் முனைவர் திரு.T.ஜெயக்குமார், இணைப் பேராசிரியர், ஆங்கிலத் துறை, பெரியார் அரசுக் கல்லூரி, திருச்சி மேற்கண்ட தலைப்பில் சிறப்புரையாற்றினார்.



இளங்கலை, முதுகலை மாணவியர் சார்பாக Dr.Faustis என்ற நாடகம் அரங்கேற்றம் செய்யப்பட்டது. முதல்வர், சிறப்பு விருந்தினர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் அனைவரும் மாணவியர்களின் திறமைகளை கண்டு மனமார பாராட்டினார்கள். முதுகலை இரண்டாமாண்டு மற்றும் இளங்கலை மூன்றாமாண்டு மாணவிகள் Fire Hawks (PG) Northern Lights (UG) என்ற தலைப்புகளில் தங்களது படைப்புகள் அடங்கிய இதழை வெளியிட்டனர்.

இக்கல்வியாண்டின் இளங்கலை மாணவியருக்கான ஆங்கில இலக்கிய மன்றக் கூட்டம் 12.03.2020 அன்று பிற்பகல் கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி.செ.லதா பூரணம் அவர்கள் தலைமையில் Indian Diasporic Writing என்ற தலைப்பில் முனைவர் A.R.உமா, உதவிப் பேராசிரியர், ஆங்கிலம், சரஸ்வதி நாராயணன் கல்லூரி, மதுரை அவர்கள் சிறப்புரையாற்றினார்.

## பொருளியல் துறை



19.02.2020 அன்று பொருளியல் மன்றத் துவக்க விழா நம் கல்லூரியின் காமராஜர் அரங்கில் நடைபெற்றது. அவ்விழாவின் போது தாமரைப்பாடி, புனித அந்தோணியார் கல்லூரியின் பொருளியியல் உதவிப் பேராசிரியர், திருமதி J.ரோகினி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இளங்கலை பொருளியல் மாணவியர்க்கு "Globalisation and Indian Economy" என்ற தலைப்பிலும், முதுநிலை பொருளியல் மாணவியர்க்கு "Recent Budget - At a glance" என்ற தலைப்பிலும் சிறப்புரை ஆற்றினார்.


## வரலாற்றுத் துறை

16.03.2020 அன்று நடைபெற்ற வரலாற்று மன்றக் கூட்டத்தில் முனைவர் S.ஜெயந்தி மாலா M.A., M.Phil., Ph.D, உதவிப் பேராசிரியர், அருள்மிகு பழனியாண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி, பழனி அவர்கள் "Education and Women Empowerment History of Dindigul Region Through The ages" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

## *கணிதத்துறை*

இக்கல்வியாண்டில் கணிதத்துறையில் முழுநேர மற்றும் பகுதிநேர ஆராய்ச்சி படிப்பு (Ph.D) தொடங்கப்பட்டது.

புனித அந்தோணியார் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 12.02.2020 to 13.02.2020 அன்று அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழக உறுப்பு கல்லூரிகளுக்கு இடையே நடைபெற்ற தடகள போட்டிகளில் (800mts, 400 mts relay, Long jump) இ.ஜோன் பிரபா II B.Sc (II Shift) என்ற மாணவி கலந்து கொண்டார்.



11.10.2019 அன்று ஒருநாள் கணித்துறை மாணவிகள் கல்வி சுற்றுலாவாக சுசீந்தரம் பத்மநாபுரம் அருங்காட்சியகம், திருபரப்பு நீர்வீழ்ச்சி, கன்னியாகுமரி போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பயனடைந்தனர்.

இக்கல்வியாண்டில் கணிதத் துறைகளைச் சார்ந்த பேராசிரியர்கள் 8 ஆய்வுக் கட்டுரைகளை மாநில, தேசிய மற்றும் சர்வதேச இதழ்களில் வெளியிட்டுள்ளனர். கணிதத் துறையைச் சார்ந்த 4 பேராசிரியர்கள் ஆய்வு வழிகாட்டியாக செயல்பட்டு வருகின்றனர்.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தில் 25.11.2019 அன்று நடைபெற்ற தேசிய அளவிலான ஒரு நாள் கருத்தரங்கில் "Big Data Analytics and Applications" என்ற தலைப்பில் நடைபெற்றதில் நமது இளம் அறிவியல் மற்றும் முது அறிவியல் மாணவிகள் 20-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

காந்திகிராம பல்கலைக் கழகத்தில் கணிதத்துறை சார்பாக 04.02.2020 அன்று நடைபெற்ற மாநில அளவிலான பல்வேறு போட்டிகளில் நமது இளம் அறிவியல் மற்றும் முது அறிவியல் மாணவியர்கள் பங்குபெற்றனர்.

## இயற்பியல் துறை



எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரியில் 04.03.2020 அன்று இயற்பியல் மன்ற துவக்க விழா நடைபெற்றது. இவ்விழாவினை இயற்பியல் துறை தலைவர் Dr.R.இராஜம்மாள் அவர்கள் வரவேற்புரை வழங்கி துவக்கி வைத்தார். இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் இயற்பியல் ஆசிரியராக பணிபுரியும் Dr.மாணிக்கம் மகேந்திரன் அவர்கள் "Nano technology using in Agriculture" என்ற தலைப்பின் கீழ் மாணவிகளுக்கு பல புதுவிதமான கருத்துக்களையும், இயற்பியலின்


# வேதியியல் துறை

29.11.2019 அன்று வேதியியல் துறை பேராசிரியர்கள் மற்றும் இளம் அறிவியல் மூன்றாம் ஆண்டு மாணவிகள் மூலம் திண்டுக்கல் பெரியார் நகரில் உள்ள மகளிர்களுக்கு "சுய தொழில் மற்றும் தொழில் முனைவோர்" பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.


இந்நிகழ்ச்சியின் தொடக்கமாக முனைவர் மா.தனலெட்சுமி, துறைத்தலைவர், வேதியியல் துறை அவர்கள் அனைவரையும் வரவேற்று சுயதொழில் பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விளக்கினார். அதன்பின்பு மூன்றாம் ஆண்டு இளம் அறிவியல் வேதியியல் துறை மாணவிகள் சோப்பு தூள் மற்றும் சோப்பு திரவம் தயாரிப்பதற்கு தேவையான மூலப்பொருள்கள், அவற்றைக் கலக்கும் விதம் ஆகியவற்றை விளக்கி, அதனை எவ்வாறு தயாரிப்பது என்பதை தெளிவாக செயல்முறை விளக்கத்தின் மூலம் செய்து காட்டினர். மேலும் இந்த மூலப் பொருட்களை குறைந்த விலையில் வாங்கி சோப்பு திரவம் மற்றும் சோப்புத் தூளைத் தயாரித்து நல்ல வருமானம் ஈட்ட முடியும் என்பதையும் அம்மகளிருக்கு எடுத்துரைத்து ஊக்கப்படுத்தினர். இந்நிகழ்ச்சியின் மூலம் அம்மகளிருக்கு சுயதொழில் பற்றிய விழிப்புணர்வு கிடைக்கப் பெற்று பயனடைந்தனர்.

07.01.2020 அன்று வேதியியல் துறை பேராசிரியர்கள் மற்றும் இளம் அறிவியல் மூன்றாம் ஆண்டு மாணவிகள் மூலம் நமது கல்லூரியின் திறந்த வெளி கலையரங்கத்தில், பொருளியல் துறை மாணவிகளுக்கு சுயதொழில் மற்றும் தொழில்முனைவோர் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியின் தொடக்கமாக முனைவர் மா.தனலெட்சுமி, துறைத் தலைவர், வேதியியல் துறை அவர்கள் அனைவரையும் இந்நிகழ்ச்சிக்கு வரவேற்று சுயதொழில் பற்றியும், தொழில் முனைவோர் பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விளக்கினார். பின்னர் மூன்றாம் ஆண்டு இளம் அறிவியல் வேதியியல் துறை மாணவிகள் சோப்புத் தூள் தயாரிப்பதற்கு தேவையான மூலப் பொருட்கள், அவற்றை கலக்கும் விதம் ஆகியவற்றை விளக்கி, அதனை எவ்வாறு தயாரிப்பது என்பதை தெளிவாக செயல்முறை விளக்கத்தின் மூலம் செய்துகாட்டினர். மேலும் இந்த மூலப்பொருட்களை குறைந்த விலையில் வாங்கி சோப்புத் தூள் தயாரித்து நல்ல வருமானம் ஈட்ட முடியும் என்பதையும் அம்மாணவிகளுக்கு எடுத்துரைத்து ஊக்கப்படுத்தினர். இந்நிகழ்ச்சியின் மூலம்

# தாவரவியல் துறை



17.02.2020 அன்று தாவரவியல் துறை மன்றக்கூட்டம் தாவரவியல் ஆய்வுக் கூடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தாவரவியல் துறைத்தலைவர் முனைவர் சு.சிவசங்கரி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். மன்றக் கூட்டத்தின் சிறப்பு விருந்தினராக முனைவர் D.Illakkiam M.Sc., M.Phil., Ph.D., Assistant Professor, Department of Biotechnology, Mother Teresa Women's University, Kodiakanal அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். "Microbial Genetics" என்ற தலைப்பில் மாணவிகளுக்கு புரியும் வகையில் RNA செயல்பாடுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். மூன்றாமாண்டு மாணவி S.நந்தினி நன்றியுரை ஆற்றினார்.




13.12.2019 அன்று தாவரவியல் மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் ஒரு நாள் கல்விச் சுற்றுலாவாக குற்றாலத்திற்கு சென்று தாவர வகைகளை சேகரிப்பு செய்தும், அருவிகளை பார்வையிட்டும் பயனடைந்தனர்.

## *புவியியல் துறை*

புவியியல் துறையின் சார்பாக 18.02.2020 அன்று காலை 10.30மணி அளவில் நமது கல்லூரியில் LCD அரங்கில் புவியியல் மன்றக் கூட்டம் நம் கல்லூரி முதல்வர் முனைவர் செ.லதா பூரணம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. முனைவர் ஜா.தேன்மொழி இணைப் பேராசிரியர் மற்றும் புவியியல் துறைத்தலைவர் அவர்கள் வரவேற்புரை வழங்கி, சிறப்பு விருந்தினர் அவர்களை அறிமுகம் செய்தார். செ.கணேசன் அவர்கள் இளங்கலை மாணவியர்களிடம் "Application of GIS" என்ற தலைப்பிலும், த.மதிவாணன் அவர்கள் முதுகலை மாணவியர்களிடம் "Application of Remote Sensing" என்ற தலைப்பிலும் உரையாற்றினார்கள். மாணவியர்கள் மிக ஆர்வமுடனும் சிறப்பு விருந்தினரிடம் கலந்துரையாடலில் பங்கேற்றனர். புவியியல் துறையில் அனைத்து மாணவியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். மன்ற செயலர் தா.சிவரஞ்சனி மூன்றாம் ஆண்டு புவியியல் துறை மாணவி நன்றியுரை கூற மன்ற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

# கணினி அறிவியல் துறை



30.08.2019 அன்று கணினி அறிவியல் துறையில் ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கு முதன் முறையாக "Data Science and Machine Learning - DSML 19" என்ற தலைப்பில் முதல்வர் முனைவர் செ.லதா பூரணம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கத்திற்கு பேராசிரியர் முனைவர் திரு.திருவேங்கடம், ஆடிகாட்ட பல்கலைக்கழகம், எத்தியோப்பியா மற்றும் பேராசிரியர் முனைவர் திரு.நாகராஜன், ஆம்போ பல்கலைக் கழகம் அவர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். முனைவர் ஆர்.மாலா, கணினி அறிவியல் துறைத்தலைவர், அழகப்பா பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரி, பரமக்குடி அவர்கள் தலைமையில் இக்கருத்தரங்கில் 40-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு வாசிக்கப்பட்டது. இதற்கான E-Proceedings வெளியிடப்பட்டு 200-க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.




28.01.2020 அன்று கணினி அறிவியல் துறையில் ஒருநாள் மாநில அளவிலான பயிற்சி பட்டறை Internet of Things 4.0 என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினர்களாக Twirl Tact கம்பெனியை சேர்ந்த மூன்று நபர்கள் திரு.கார்த்திக் ஈஸ்வர், எ.முகமது அலி மற்றும் எம்.பைசல் ஆகியோர் புதிய தொழில் நுட்பக் கருவிகளைக் கொண்டு Arduino IDE மென்பொருள் மூலம் செய்முறை பயிற்சி அளித்தனர். மேலும் எம் துறையைச்

# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி

திண்டுக்கல் - 624 001. தமிழ்நாடு.

தேசிய தரமதிப்பீட்டு ஆய்வுக் குழுவால் 'A' தரச்சான்றளிக்கப்பட்ட கல்லூரி




# கல்லூரி ஆண்டு மலர்

இதழ் - 55

2020 - 2021

# தமிழ்த்துறை



19.03.2021 அன்று தமிழ்த்துறை இலக்கிய மன்றத்தின் துவக்க விழா நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர். க.நாகநந்தினி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினர் முனைவர். ஆ.பாப்பா உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை, டோக் பெருமாட்டிக் கல்லூரி, மதுரை அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் வி.அநுராதா அவர்கள் தலைமையுரை ஆற்றினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், முனைவர். லொ.ஆ.உமாமகேஸ்வரி அவர்கள் நன்றியுரை ஆற்ற இனிதே நிறைவு பெற்றது.

21.05.2021 அன்று தமிழ்த்துறை சார்பில் 'நாட்டுப்புற இலக்கிய வகைமைகளும் ஆய்வு முறைகளும்' என்னும் தலைப்பில் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது. தமிழ்துறைத் தலைவர் முனைவர். க.நாகநந்தினி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இக் கருத்தரங்கில் கல்லூரி முதல்வர் முனைவர் வி.அநுராதா அவர்கள் தலைமையுரை ஆற்றினார். சிறப்புரையாளர் தி.உமாதேவி, பேராசிரியர், நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியத்துறை, தில்லிப் பல்கலைக் கழகம், புதுதில்லி அவர்கள் நாட்டுப்புற இலக்கிய வகைமைகளும் ஆய்வு முறைகளும் எனும் தலைப்பில் உரையாற்றினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர். லொ.ஆ.உமாமகேஸ்வரி அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

18.06.2021 அன்று தமிழ்த்துறை சார்பில் மொழி பெயர்ப்பு நாடகங்கள் என்னும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் நடைபெற்றது. தமிழ்த்துறை தலைவர் முனைவர். க. நாகநந்தினி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இக்கருத்தரங்கில் கல்லூரி முதல்வர் முனைவர். வி.அநுராதா அவர்கள் தலைமையுரையாற்றினார். சிறப்புப் பொழிவாளர் முனைவர் பா.இரவிக்குமார் உதவிப் பேராசிரியர் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக் கழகம், புதுச்சேரி அவர்கள் மொழிபெயர்ப்பு நாடகங்கள் எனும் தலைப்பில் உரையாற்றினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர். லொ.ஆ.உமாமகேஸ்வரி அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

# ஆங்கிலத் துறை

## ASSOCIATION MEETING

| S.No | Date | Topic | Resource Person | No of Beneficiary |
|---|---|---|---|---|
| 1 | 23.4.2021 | Feminist Literary Theory<br>Mode : Zoom Meet | Dr.S.Kanitha, Former Head and Associate Professor, Research Department of English, Arulmigu Palani Andavar College for Women Palani. | 200 |
| 2 | 27.4.2021 | Translation is an Art | Prof. T.Anandha Rani, Former Head and Associate Professor of English, M.V. Muthiah Government Arts College (W) Dindigul. | 190 |

## SEMINAR / WORKSHOP


| S.No | Date | Name of the Conference / Seminar / Workshop etc. | Number of Resource Persons | No of Beneficiary |
|---|---|---|---|---|
| 1 | 25.03.2020 | Anthropocene Reading (Webinar) | Dr.P. Prayer Elmoraj, Assistant Professor of EnglishPachaiyappa's College, Chennai | 200 |
| 2 | 25.06.2020 | Creative Writing (Webinar) | Dr.Abhijeet Prakash Wadalkat, Assistant Professor of English, Model Degree College, Maharastra. | 190 |
| 3 | 09.03.2021 | National Virtual Seminar on Indian Writting in English: Publication and Research. | Dr.P.Laxmi Prasad, Assistant Professor, Department of English University Arts College, Satavahana University, Karimnagar, Telangana | 160 |
| 4 | 02.07.2021 | International Virtual Seminar on Requisites of a Literary Mind | Dr. Maria Mercy Amutha Amalraj, Assistant Professor, College of Applied Medical Sciences, English Language Institute, Jazan University, Kingdom of Saudi Arabia. | 160 |

# வணிகவியல் துறை

இக்கல்வியாண்டில் வணிகவியல் துறையில் 24.04.2021 அன்று மன்ற விழா நடைபெற்றது. வணிகவியல் துறைத் தலைவர் முனைவர்.சு.சியாமளாதேவி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

முனைவர்.என்.சுந்தரம், பேராசிரியர் வணிகவியல் துறைத் தலைவர் வி.ஐ.டி. பல்கலைக்கழகம், வேலூர் அவர்கள் மின்நிர்வாகம் (E.Governance) என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். 130 மாணவியர்கள் இணைய வழியில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.


## பொருளியல் துறை




24.04.2021 அன்று பொருளாதார மன்ற விழா இணைய வழி மூலமாக நடைபெற்றது. அவ்வமயம் நிலக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரியின் பொருளியல் உதவிப் பேராசிரியர் முனைவர். கு.லெட்சுமி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இளங்கலை மாணவியருக்கு இந்தியக் கிராமங்களில் வேலைவாய்ப்புகள் என்ற தலைப்பிலும் முதுகலை மாணவியருக்கு "வரவு - செலவு திட்டம் ஒரு கண்ணோட்டம்" என்ற தலைப்பிலும் சிறப்புரை ஆற்றினர். மாணவியர்கள் பயன் பெற்றனர்.

## வரலாற்றுத் துறை

இக்கல்வியாண்டில் வரலாற்றுத் துறையில் 27.04.2021 அன்று வரலாற்று மன்றக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் சிறப்பு விருந்தினராக டாக்டர். J.R. சிவராம கிருஷ்ணன் வரலாற்றுத்துறை, உதவிப் பேராசிரியர் குந்தவை நாச்சியார் அரசு கலைக் கல்லூரி, தஞ்சாவூர் அவர்கள் "Keladi Excavation" மற்றும் "Chola Period Inscriptions" பற்றி சிறப்புரை ஆற்றினார். இதில் இளங்கலை, முதுகலை மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அவருடைய சிறப்புரை மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.




இக்கல்வியாண்டில் உதவிப்பேராசிரியர் முனைவர். ஜெ.தனசேகரன் அவர்களால் இணையவழியில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டது. வரலாற்றுத்துறைத் தலைவர் திருமதி. பென்சிலா அவர்கள் வரவேற்புரை வழங்கினார். நமது கல்லூரி முதல்வர் முனைவர்.வி.அனுராதா அம்மையார் அவர்கள் தலைமையுரையாற்றினார்.

15.05.2021-ல் A Critique of Nayaks Art and Architecture' என்ற தலைப்பில் முனைவர் ஆர்.அந்தோனிபால் ஞானசேகர், இணைப்பேராசிரியர் (ஓய்வு) அருள் ஆனந்தர் கல்லூரி கருமாத்தூர் அவர்கள் இளங்கலை மாணவியருக்கு இணையவழி மூலமாக ஒருநாள் கருத்தரங்கு நடைபெற்றது.

20.05.2021 அன்று "Current Trends in Water Treatment Technologies" என்ற தலைப்பில் முனைவர் சுப்பையா முத்து பிரபு, ஹேன்யாங் பல்கலைக்

# கணிதத் துறை

26.04.2021 அன்று இணையவழியில் நடைபெற்ற கணிதமன்றக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக முனைவர். A. முத்துக்காமாட்சி நிலக்கோட்டை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, கணித உதவிப் பேராசிரியர், அவர்கள் கலந்து கொண்ட இளம் அறிவியல் மாணவியருக்கு Illusion of Mathematics என்ற தலைப்பிலும் முதுநிலை அறிவியல் மாணவியருக்கு Mathematical Modelling என்ற தலைப்பிலும் சிறப்புரை ஆற்றினார். மாணவிகளின் கணிதத் திறனை ஊக்குவிக்கும் வகையில் அமைந்த சிறப்புரை மாணவிகள் கணிதத்தில் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்வதற்கும் தூண்டுகோலாய் அமைந்தது. மேலும் போட்டித் தேர்வுகள் குறித்து சொல்லப்பட்ட கருத்துக்கள் மாணவிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. துறை சார்ந்த வேலை வாய்ப்புகள் குறித்து சொல்லப்பட்ட கருத்துகள் மாணவிகளுக்கு கணிதத்தில் ஈடுபாட்டை அதிகரிக்கும் வகையில் அமைந்தது.



## இயற்பியல் துறை

நாள் : 25.04.2021

தலைப்பு : புதிய மில்லினியம் ஆற்றல் சேமிப்பு முன்னோக்கு

சிறப்பு விருந்தினர் : முனைவர்.விக்ரமன், பேராசிரியர் காந்தி கிராம கிராமிய பல்கலைக் கழகம், திண்டுக்கல்.

கருத்தரங்கு இடம் : நிகழ்நிலை மூலம் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வினை இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் திருமதி. இரா.இராஜம்மாள் அவர்கள் வரவேற்பு உரையுடன் சிறப்பு விருந்தினர் பற்றிய அறிமுகம் வழங்கினார். சிறப்பு விருந்தினர் முனைவர் திரு.பி.விக்ரமன் நிகழ்நிலையில் உரை ஆற்றும் போது புதிய மில்லினியம் ஆற்றல் சேமிப்பு முன்னோக்கு என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார். மேலும் அடிப்படை ஆற்றல் மற்றும் ஆற்றல் சாதனத்தின் வகைப்பாடு பற்றி அவர் விளக்கினார். வெவ்வேறு ஆற்றல் திட்டத்தின் கீழ் செல்லும் திட்டம் மற்றும் நிறுவனங்கள் மற்றும் பயன்கள் பற்றியும் விளக்கக் காட்சி மூலம் மிகவும் சிறப்பாக எடுத்துரைத்தார். மாணவிகள் மிகவும் ஆர்வமுடன் பங்கேற்று பயன்பெற்றனர். "நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

IQAC மற்றும் இயற்பியல் துறை சேர்ந்து ஒருங்கிணைந்த ஒருநாள் மாநில அளவிலான கருத்தரங்கு நிகழ்நிலை.

நாள் : 26.05.2021

தலைப்பு : சூரிய ஆற்றல் சாதனம் மற்றும் பயன்பாடு

சிறப்பு விருந்தினர் : ஓய்வு பெற்ற காந்திகிராம கிராமியப் பல்கலைக் கழகம், பேராசிரியர். முனைவர்.திரு.சி.ஆறுமுகம் அவர்கள்,

கருத்தரங்கு : நிகழ்நிலை மூலம் நடத்தப்பட்டது.

இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் திருமதி.இரா.இராஜம்மாள் அவர்கள் வரவேற்புரை வழங்க இனிதே தொடங்கியது.

முனைவர். திருமதி.வி.அநுராதா கல்லூரி முதல்வர் அவர்கள் சூரிய ஆற்றல் பற்றியும், சிறப்பு விருந்தினர் பற்றியும் மிக அழகாக தலைமை உரைவழங்கி நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார். தலைமையுரையை தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரை வழங்கப்பட்டது.

முனைவர் திரு.சி.ஆறுமுகம் ஐயா அவர்கள் "சூரிய ஆற்றல் சாதனம் மற்றும் அதன் பயன்பாடு அதில் முனைவர் பட்டம் பெற்றவர். அவருக்கே உரியவழியில் மிகநேர்த்தியாக உரைவழங்கினார். சூரிய ஆற்றல் சாதனம் மற்றும் அதன் பயன்பாடு பற்றி தொடக்கம் முதல் இறுதிவரை முழுவதுமாக விரிவுரை வழங்கினார். சூரிய ஆற்றல் சாதனம் எவ்வாறு எல்லா இடங்களிலும் பயன்படுத்தமுடியும் எனத் தொடங்கி அதில் சூரிய வெந்நீர் பொறி பற்றியும் அதை எவ்வாறு உருவாக்குவது மற்றும் எந்த எந்த வேதியியல் பொருள்கள் உபயோகப்படுத்தலாம், அவற்றின் பயன்கள் என்ன? செயல்பாடுகள் என்ன?

நிறைவடைந்தது.

## வேதியியல் துறை


27.04.2021 அன்று வேதியியல் மன்றக்கூட்டம் இணைய வழியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முனைவர். மா.தனலெட்சுமி துறைத்தலைவர், வேதியியல் துறை அவர்கள், அனைவரையும் வரவேற்று வரவேற்புரை வழங்கினார். இந்த இணைய வழி மன்ற கூட்டத்தை முனைவர்.பூ.ஞானசௌந்தரி, உதவிப்பேராசிரியர் அவர்கள் தொகுத்து வழங்கினார். மேலும் அவர் சிறப்பு விருந்தினரின் சிறப்புகளையும் கூறி அவரை அறிமுகம் செய்து வைத்தார். இக்கூட்டத்தின் சிறப்பு விருந்தினராக முனைவர். R.தேன்மொழி M.Sc., M.Phil.,Ph.D.,D.T.P., முதல்வர் சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம் அவர்கள் கலந்து கொண்டு மாணவிகளுக்கு சிறப்புரை வழங்கினார்.



இளம் அறிவியல் மாணவிகளுக்கு அவர், “Nano Medicine Current Status and Future Prospects” என்னும் தலைப்பில் ஆற்றிய உரை இன்றைய மருத்துவ உலகில் நானோ தொழில் நுட்பத்தின் முக்கியத்துவத்தையும், இத்துறையின் எதிர்கால வாய்ப்புகளையும் அறிந்துகொள்ள உறுதுணையாக இருந்தது.

## தாவரவியல் துறை

தாவரவியல் துறை மன்றக் கூட்டம் 27.04.2021 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் முனைவர். சு.சிவசங்கரி தாவரவியல் துறைத் தலைவர் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் வி.அனுராதா அவர்கள் வருகைபுரிந்து தலைமை உரையாற்றினார். இம் மன்றக் கூட்டத்தின் சிறப்பு விருந்தினர் முனைவர்.D.கதிரேசன், இணைப் பேராசிரியர், தாவரவியல் துறை, சரஸ்வதி நாராயணன் கல்லூரி, மதுரை அவர்கள் Microbial World என்ற தலைப்பில் மிகச் சிறப்பாக சிறப்புரை ஆற்றினார்கள். மூன்றாமாண்டு மாணவி எஸ்.சிநேகா நன்றியுரை கூற இக்கூட்டம் இனிதே முடிவடைந்தது.




## புவியியல் துறை

புவியியல் மன்றக்கூட்டம் மதிப்பிற்குரிய கல்லூரி முதல்வர்.முனைவர்.வி அனுராதா அவர்கள் தலைமையில் டாக்டர்.ஜெ.தேன்மொழி புவியியல் துறைத்தலைவர் மற்றும் டாக்டர்.வி.தங்கமணி பேராசிரியர் அவர்களின் முன்னிலையில் 26.04.2021 அன்று இணையவழியாக இக்கூட்டம் நடைபெற்றது. புவியியல் துறை மாணவர்களின் பங்கேற்பில் Geography for Competitive Exams" and Climatic Change and it Seasonal Diseases" ஆகிய தலைப்புகளில் உரை நிகழ்த்தப்பட்டது. UPSC, SSC, TNPSC போன்ற போட்டித் தேர்வுகளிலும் புவியியல் பாடத்திட்டம் இணைகிறது என்று பேராசிரியர் உரையின் வாயிலாக கோடிட்டுக் காட்டப்பட்டது. காலநிலை மாற்றம் மற்றும் ஆரோக்கியம் அதனால் ஏற்படக்கூடிய ஆரோக்கிய பாதிப்புகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும் சுகாதாரத்தில் GIS பயன்பாடு பற்றிய அறிவை பெறும் வகையில் கலந்துரையாடல் நடைபெற்றது. புவியியல் துறையின் மாணவியர் மற்றும் பேராசிரியர்களின் பங்கேற்பினால் இம்மன்றக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

# கணினி அறிவியல் துறை


கணினி அறிவியல் துறை மன்றக்குழு, கூட்டமானது "Techprenuer - Think Out of the Box" என்ற கூகுள் மீட் நிகழ்நிலை பயனாக்கத்தில் 23.03.2021 அன்று நடைபெற்றது. நம் கல்லூரி முதல்வர் முனைவர்.வி.அனுராதா அவர்கள் தலைமையுரை ஆற்றினார். துறைத்தலைவர் முனைவர்.சீ.கிருஷ்ணவேணி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். மன்றக்குழு கூட்ட சிறப்பு விருந்தினர் முனைவர் மு.கிருஷ்ணமூர்த்தி, Founder and Trainer, Sui Technologies, Dindigul அவர்கள் Web Developer and Digital Marketing என்ற தலைப்பில் உரையாற்றினார். இம்மன்ற கூட்டத்தில் 100க்கு மேற்பட்ட இளங்கலை மற்றும் முதுகலை மாணவியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இறுதியில் உதவிப் பேராசிரியர் திருமதி.சு.ராசாத்தி அவர்கள் நன்றியுரை நல்கினார். கணினி அறிவியல் துறையின் மன்ற குழு கூட்டம் சார்பாக, மாணவிகளுக்கு இடையேயான போட்டிகள் (Pencil Drawing, Debugging Animation) 10.03.2021 முதல் 12.03.2021 வரை மூன்று நாட்கள் நடைபெற்றன. இப்போட்டிகளில் பல்வேறு மாணவிகள் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கல்லூரி முதல்வர் அவர்கள் பரிசுகள் வழங்கி சிறப்புசெய்தனர்.

கணினி அறிவியல் துறை மற்றும் அகத்தர உறுதிக்குழு (IQAC) இணைந்து மாநில அளவிலான ஒரு நாள் இணைய வழி கருத்தரங்கு Protective Measures and Awareness of sexual Harassment and Domestic Violence" என்ற தலைப்பில் 27.04.2021 அன்று ஜூம் நிகழ்நிலை பயனாகத்தில் நடைபெற்றது. நமது கல்லூரி முதல்வர் முனைவர்.வி.அனுராதா அவர்கள் தலைமையுரை ஆற்றினார். உதவிப் பேராசிரியர் திருமதி.N.ராஜாத்தி அவர்கள் வரவேற்புரை மற்றும் சிறப்பு விருந்தினர் அறிமுக உரையாற்றினார். முனைவர்.டி.ஆர்.சிவபிரியா, இணைப் பேராசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் (B.Sc., & M.Sc., IT) டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை அவர்கள் சமூகத்தில் நடைபெறும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் பற்றிய விழிப்புணர்வும், அதற்கான பாதுகாப்பு முறைகள் மற்றும் சட்ட வழிகளையும் மாணவிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். இக்கருத்தரங்கில் 100க்கும் மேற்பட்ட இளம்அறிவியல் மற்றும் முதுஅறிவியல் மாணவியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இறுதியில் உதவிப் பேராசிரியர் செல்வி.ப.முத்தமிழ் செல்வி அவர்கள் நன்றி உரையாற்றினார்.

# எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி

**திண்டுக்கல் - 624 001. தமிழ்நாடு.**

தேசிய தரமதிப்பீட்டு ஆய்வுக் குழுவால் 'A' தரச்சான்றளிக்கப்பட்ட கல்லூரி




## கல்லூரி ஆண்டு மலர்

## 2021 - 2022

## இதழ் - 56

# தமிழ்த்துறை மனறக கூட்டம

தமிழ் இலக்கிய மன்ற விழா காமராஜர் அரங்கில் 10.03.2022 அன்று நடைபெற்றது. இணைப் பேராசிரியர் மற்றும் தமிழ்துறைத் தலைவர் முனைவர். க.நாகநந்தினி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். நம் கல்லூரி முதல்வர் முனைவர். தே.லட்சுமி அவர்கள் தலைமையுரை ஆற்றினார். சிறப்பு விருந்தினராக முனைவர் ச.மாசிலாதேவி உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை ஜி.டி.என் கலைக்கல்லூரி, திண்டுக்கல் அவர்கள் "தமிழும் பணிவாய்ப்புகளும்" என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். இலக்கியமன்றப் பொறுப்பாசிரியராக முனைவர் சி.இராஜலெட்சுமி அவர்கள் நன்றியுரை வழங்கினார். தமிழ்த்துறை இளங்கலை மற்றும் முதுகலை மாணவியர்கள் மற்றும் அனைத்து துறைப் பேராசிரியர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள்.

தமிழ்த்துறை சார்பில் இணைய வழியாக 07.03.2022 முதல் 09.03.2022 வரை மூன்று நாட்கள் கருத்தரங்கம் நடைபெற்றது. முதல் நாள் "ஆய்வ நெறிமுறைகள்" என்னும் பொருண்மையில் சென்னை உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் சமூகவியல் கலை மற்றும் பண்பாட்டுப் புல இணைப்பேராசிரியர் முனைவர் ஆ.மணவழகன் அவர்கள் தமிழியல் ஆய்வுகள் காலமும் களமும்" என்ற தலைப்பிலும், சென்னை பாரதி மகளிர் கலைக்கல்லூரி



## ஆங்கிலத்துறை

### இலக்கிய மன்றக் கூட்டம் (இளங்கலை)

இளங்கலை ஆங்கில இலக்கிய மன்றக் கூட்டம் 19.03.2022 அன்று நடந்தது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக முனைவர். பிரேமா ஜோசுவா, உதவிப் பேராசிரியர், ஆங்கிலத்துறை, காவேரி பெண்கள் கல்லூரி, திருச்சிராப்பள்ளி அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். சிறப்பு விருந்தினர். முனைவர். பிரேமா ஜோசுவா அவர்கள் மாணவியரின் இலக்கிய அறிவை வளர்க்கும் வகையில் சினுவா ஆச்சிபீ-யின் புதினங்களைப் பற்றி சிறப்புரை ஆற்றினார்.

### இலக்கிய மன்றக் கூட்டம் (முதுகலை)

முதுகலை ஆங்கில இலக்கிய மன்றக் கூட்டம் 22.03.2022 அன்று நடந்தது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக முனைவர். திரு.எம்.பி. கணேசன், உதவிப் பேராசிரியர், ஆங்கிலத் துறை, சௌராஷ்டிரா கல்லூரி, மதுரை அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். அவர் தற்கால "இந்திய நாடகவியல்" என்ற தலைப்பில் வழங்கிய சிறப்புரை மாணவியரின் இலக்கிய அறிவு வளர்ச்சியடைய மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

## Exposure Visit

19.4.2022 அன்று மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியின் ஆங்கிலத் துறையில் நடத்தப்பட்ட ஷேக்ஸ்பியரின் Tempest என்னும் நாடகத்தைக் கண்டு ரசிப்பதற்கு எமது ஆங்கிலத் துறை மாணவிகள் 175 பேரும், பேராசிரியர்கள் 7 பேரும் சென்று வந்தனர்.

## வணிகவியல் துறை

இக்கல்வியாண்டில் வணிகவியல் மன்ற கூட்டம் 31.3.2022 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தின் சிறப்பு விருந்தினராக Mr. M.S. விஜயகுமார் M.Com., B.Ed., M.B.A., M.Phil., HDNC

## பொருளியல் துறை

07.03.2022 அன்று பொருளாதார மன்றக் கூட்டம் இணைய வழியாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் மதுரை காமராஜர் பல்கலைக் கழக வேளாண்மைதுறை உதவிப் பேராசிரியரும், துறைத்தலைவருமான முனைவர்.திருமதி.சுதாசினி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இளங்கலை மாணவிகளுக்கு "Agricultural Scenario of India" என்ற தலைப்பிலும் முதுகலை மாணவிகளுக்கு "Role of Agricultural Sector in India" என்ற தலைப்பிலும் சிறப்புரை ஆற்றினார். இவ்வலைதள மன்றக்கூட்டத்தில் 13-க்கு மேற்பட்ட பேராசிரியர்களும் 100க்கு மேற்பட்ட இளங்கலை மற்றும் முதுகலை மாணவிகளும் பங்கு கொண்டு பயன்பெற்றனர்.

## வரலாற்றுத்துறை மன்றக் கூட்ட அறிக்கை

வரலாற்றுத் துறையின் சார்பாக 10.03.2022 அன்று காலை 10.00 மணியளவில் LCD அரங்கில் வரலாற்றுத்துறை மன்றக்கூட்டம் நம் கல்லூரி முதல்வர் முனைவர் தே.லட்சுமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. துறைத் தலைவர் திருமதி.L.பென்சிலா M.A.,M.Phil., அவர்கள் வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக திருமதி. S.விஜயலட்சுமி எம்.ஏ.,பி.எல்., அவர்கள் இளங்கலை வரலாறு மாணவியருக்கு "பெண்களின் சட்ட நலன்கள்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். அதை தொடர்ந்து முதுகலை வரலாறு மாணவியருக்கு தமிழ்நாட்டில் "உயர்கல்வியில் பெண்களின் பங்கு" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். வரலாற்றுத்துறை பேராசிரியர் Dr.R. நந்தினி M.A., M.Phil., B.Ed., Ph.D., அவர்கள் பொறுப்பாசிரியராக செயல்பட்டார். மன்றக்கூட்டத்தில் மாணவியர்கள் சிறப்பு விருந்தினருடன் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

வரலாற்றுத்துறை மாணவியர் மற்றும் பேராசிரியர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெற்றனர். வரலாற்று மன்ற செயலர். ஆ.கிருத்திகா நிறைஞர் மாணவி நன்றி நவில நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## கணித மன்றக் கூட்ட அறிக்கை

30.03.2022 அன்று நடைபெற்ற கணித மன்றக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக முனைவர். N.சீனிவாசகன், கணிதத்துறை தலைவர், அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, நிலக்கோட்டை அவர்கள் கலந்து கொண்டு இளம் அறிவியல் மாணவியருக்கு Fundamentals of Mathematics என்ற தலைப்பிலும் முதுநிலை அறிவியல் மாணவியருக்கு Geometric Functions - Theory என்ற தலைப்பிலும் சிறப்புரை ஆற்றினார்.

இளங்கலை மாணவியருக்கு அடிப்படை கணிதம் பற்றி எடுத்துரைக்கப்பட்ட கருத்துகள் மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் அமைந்தது.

முதுநிலை மாணவியருக்கு Geometric Function Theory பற்றியும் ஆய்வுப் படிப்புகளில் உள்ள முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்கள் மாணவியர்கள் கணிதத்தில் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்வதற்கு தூண்டுகோலாய் அமைந்தது.

## இயற்பியல் மன்றக் கூட்ட அறிக்கை

இந்நிகழ்வில் இயற்பியல் துறை தலைவர் முனைவர் திருமதி. இரா. இராஜம்மாள் அவர்கள் வரவேற்பு உரையுடன் சிறப்பு விருந்தினர் பற்றிய அறிமுகமும் வழங்கினார். சிறப்பு விருந்தினர் முனைவர் திரு.C. இராஜாமோகன் அவர்கள் இயற்பியல் போட்டித் தேர்வுகளில் எப்படி பங்கு பெறுவது, இயற்பியலை எப்படிப் படிக்க வேண்டும், போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள அடிப்படை அறிவுடன் தினந்தோறும் நடைபெறும் நிகழ்வுகளில் இயற்பியல் எப்படி பயன்படுகிறது என்ற விபரத்தையும் மாணவியர்களுக்கு விரிவாக விளக்கினார். மாணவியர்கள் மிகவும் ஆர்வமுடன் பங்கு பெற்று பயன்பெற்றனர். S.சகினா நூர்ஜகான் நன்றியுரை வழங்கி நாட்டுப்பண் உடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

## வேதியியல் மன்றக் கூட்ட அறிக்கை

28.03.2022 அன்று நடைபெற்ற வேதியியல் மன்றக் கூட்டத்தில் முனைவர். P.காளிமுத்து M.Sc., Ph.d., உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை காந்திகிராம கிராமிய பல்கலைக் கழகம், காந்தி கிராமம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். இக்கூட்டத்தில் முனைவர். மா.தனலெட்சுமி துறைத் தலைவர், வேதியியல் துறை அவர்கள் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர்.தே.லட்சுமி அவர்கள் தலைமையுரை ஆற்றினார். இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினரின் சிறப்புகளை கூறி அவரை முனைவர் பூ. ஞானசௌந்தரி, உதவிப் பேராசிரியர் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

## விலங்கியல் மன்றக் கூட்ட அறிக்கை

1-4-2022 அன்று நடைபெற்ற விலங்கியல் மன்றக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக முனைவர் S.உமாமகேஸ்வரி, இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், பெரியார் EVR அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி. அவர்கள் கலந்து கொண்டு இளம் அறிவியல் மாணவியருக்கு Challenges in degradation of Plastics என்ற தலைப்பிலும் முதுநிலை அறிவியல் மாணவியருக்கு Persistence and impact of Pollutants on the environment என்ற தலைப்பிலும் சிறப்புரை ஆற்றினார். இக்கூட்டத்தை முனைவர்.பா.சத்தியபாமா, இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தினார்.

# புவியியல் துறை மன்ற அறிக்கை

புவியியல் துறையின் சார்பாக 01.04.2022 அன்று காலை 10.30 மணி அளவில் நமது கல்லூரியில் LCD அரங்கில் புவியியல் மன்றக் கூட்டம் நம் கல்லூரி முதல்வர் முனைவர் தே.லட்சுமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. முனைவர் ஜா.தேன்மொழி இணை பேராசிரியர் மற்றும் புவியியல் துறைத்தலைவர் அவர்கள் வரவேற்புரை வழங்கி, சிறப்பு விருந்தினர் அவர்களை அறிமுகம் செய்தார். மருத்துவர் சாம் இளங்கோ MBBS., MD., Diabetologist Medical Officer அவர்கள் முதுகலை

# கணினி அறிவியல் துறை

23.10.2021 அன்று கணினி அறிவியல் துறை சார்பாக "TECH READY" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இதற்கு சிறப்பு விருந்தினராக திரு.சார்லஸ் காட்வின், HR Leader and Public Speaker ZOHO, Chennai அவர்கள் மென்பொருள் பயன்பாடுகள் பற்றியும், அவற்றை உலகளாவிய பன்னாட்டு நிறுவனங்களில் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பற்றியும் மாணவிகளுக்கு எடுத்துரைத்தார். இதற்கான ஏற்பாடுகளை கணினி அறிவியல் துறை சார்பாக உதவிப்பேராசிரியர் முனைவர் N.ராஜாத்தி அவர்கள் சிறப்புறச் செய்தார்கள். இளநிலை மற்றும் முதுநிலை மாணவிகள் 250 பேர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.